## வரையறுக்கப்பட்ட லிற்றோ காஸ் ரேமினல் லங்கா கம்பனி (தனியார்)- 2015

---

வரையறுக்கப்பட்ட லிற்றோ காஸ் ரேமினல் லங்கா (தனியார்) (கம்பனியின்) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபநட்ட கூற்று மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இக் கணக்காய்வை மேற்கொள்ளும் போது பொதுத் தொழிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவகமொன்று எனக்கு உதவியது.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1999 இலிருந்து மூலதன நடைபெறும் வேலைகளில் எந்தவித மாற்றங்களும் செய்யாமல் ரூபா 2,374,432 தொகை இருந்தது. கம்பனியின் பதிவேடுகளின் பிரகாரம், இது "பொதியிடப்பட்ட உற்பத்தி" ஆக இனங்காணப்பட்டிருந்தது. எனினும், அத்தகைய சொத்தின் உள்ளகத்தன்மையை தீர்மானிப்பதற்கு எந்தவித சான்றும் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. அதன் விளைவால், கம்பனியின் சொத்துக்கள் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2014 ஆம் ஆண்டின் போது பூர்த்தியாக்கப்பட்ட களஞ்சிய குளம் அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக ரூபா 17 மில்லியன் செலவினம் ஏற்பட்டிருந்தது. எனினும், இத்தொகை மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், கம்பனியின் தொழிற்பாடு அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 264.77 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 85,782,509 வரிக்கு முன்னரான தேறியலாபத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 417.37 மில்லியன் ஆன முன்னேற்றமொன்றை சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டின் போது ரூபா 408.68 மில்லியனால் வருமானம் அதிகரித்தமையே பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வுரீதியான நிதிசார் மீளாய்வு

#### 3.2.1 இலாபத்தன்மை

கம்பனியின் பிரதான வருமான மூலம் ஆகக் கட்டணமாகவிருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது இது 41 சதவீதமாக அதிகரித்தது. கம்பனியின் ரேமினலினூடாக இறக்குமதி செய்யப்பட்ட ஒவ்வொரு மெற்றிக் தொன்னிற்கான ஆக்கக்கட்டணமாக கம்பனிக்கு ஐ.அ.டொலர் 51 ஐ வரையறுக்கப்பட்ட லிற்றோ காஸ் லங்கா கம்பனி செலுத்தியிருந்தது. ஆகையால் லிற்றோ காஸ் லங்கா கம்பனியின் விற்பனை அலகு ஆக்கக் கட்டணத்திற்கு நேரடி விளைவாகவிருந்தது. இதற்கு மேலதிகமாக ஆக்கக் கட்டணம் ஐ.அ.டொலர் பெறுமதியில் பற்றுச்சீட்டிருந்தமையால் காலப்பகுதியின் போது

ரூபாவின் குறைமதிப்பீடு வருமானத்தினூடாக பங்களித்திருந்து. மீளாய்வாண்டிற்கான மற்றும் கடந்த ஐந்து வருடங்களிற்கான ஆக்கக்கட்டணம் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **ஆண்டு** | **ஆக்கக் கட்டணம்** |
|---|---|
| | **ரூபா மில்லியன்** |
| 2015 | 1,407.09 |
| 2014 | 998.40 |
| 2013 | 932.61 |
| 2012 | 930.44 |
| 2011 | 763.66 |

### 3.2.2 முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள்

கிடைக்கப்பெறாத தகவல்களின் பிரகாரம், 2015 ஆம் ஆண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான கம்பனியின் சில முக்கிய விகிதங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | **2015** | **2014** |
|---|---|---|
| **இலாபத்தன்மை விகிதங்கள் (சதவீதம்)** | | |
| மொத்த இலாப விகிதம் (ஜீபி) | 81 | 74.3 |
| தேறிய இலாப விகிதம் (என்பி) | 91.1 | 86.6 |
| சொத்துக்கள் மீதான வருவாய் (ஆர்ஒஏ) | 13.5 | 10.13 |
| ஈடுபடுத்திய மூலதனம் மீதான வருவாய் விகிதம் (ஆர்ஒசீஈ) | 15.1 | 11.2 |
| **(திரவத்தன்மை விகிதங்கள்) (தடவைகளின் எண்ணிக்கை)** | | |
| நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் | 15.3:1 | 37.8:1 |
| விரைவுச் சொத்துக்கள் விகிதம் | 15.3:1 | 37.8:1 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் மொத்த இலாப விகிதம் மற்றும் தேறிய இலாப விகிதம் போன்றன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 9.02 சதவீதம் மற்றும் 5.2 சதவீதத்தால் முன்னேற்றமடைந்திருந்த அதேநேரம் சொத்துக்கள் மீதான வருவான மற்றும் ஈடுபடுத்திய மூலதனம் மீதான வருவாய் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 33.3 சதவீதம் மற்றும் 34.8 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஆ) கம்பனியின் தொழிற்படுமூலதனம் மீளாய்வாய்டின் இறுதியிலுள்ளவாறான நிலையான வைப்புக்கள் மீள்கொடுப்பனவு மற்றும் சேமிப்பு கணக்குகளில் மேற்கொள்ளப்பட்ட (2014 இல் ரூபா 3,214.46 மில்லியன்) ரூபா 4,311.82 மில்லியன் முதலீட்டால் முக்கிய பங்கிலிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வரையறுக்கப்பட்ட லிற்றோ காஸ் லங்கா கம்பனியின் மீள்நிரப்பல் உற்பத்திப் பொறி 2010 இல் காணி மீள்குடியேற்றல் சபையிடமிருந்து கம்பனியால் குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட கெரவலப்பற்றியிலுள்ள காணியில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. எனினும், கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட லிற்றோ காஸ் லங்கா கம்பனிக்கும் இடையில் உப குத்தகை உடன்படிக்கை இருக்கவில்லை. மேலும் கம்பனிக்கு உரிய திகதியில் வரையறுக்கப்பட்ட லிற்றோ காஸ் லங்கா கம்பனியால் எந்த உப குத்தகை கட்டணமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2000 மார்ச் 29 இல் கம்பனியானது முதலீட்டுச் சபையுடன் (பீஏஐ) உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருந்தது. எனினும், கம்பனியின் முகாமைத்துவமானது பீஏஐ சான்றிதழ் பெற்றிருக்கவில்லை. இந்த சான்றிதழானது குறித்த திகதியிலிருந்து வரி விடுமுறையை பெறுவதற்கு முக்கியமானதாகும். எந்தவொரு சான்றிதலும் கிடைக்கப்பெறாமையால் வணிகத்தை ஆரம்பித்தல் என்ற கருத்தின் மீது எப்போது வரிச்சலுகை ஆரம்பிக்கப்பட்டதும், எப்போது விளக்கம் வேண்டப்பட்டதும் என்பது நிச்சயிக்க முடியாது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. முகாமைத்துவத்துவ கடிதத்தில் குறிப்பிடப்பட்ட தகவல் தொழில்நுட்ப முறைமையிலுள்ள குறைபாடுகள் தொடர்பான விஷேட கவனம் தேவைப்படுகின்றது.